# கிருபையுள்ள வார்த்தை

**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22

Vol - 18 | January ஜனவரி | 2018

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-


ஆசாரியர்களின் ஆத்துமாவைக் கொழுமையானவைகளினால் பூரிப்பாக்குவேன்: என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். எரேமியா 31:14




கௌரவ ஆசிரியர் **BETTY CHOATE** ஆசிரியர் **பிலேமோன் ராஜா**

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ராஜரீகமான ஆசாரியர்கள் | 3 |
| நான் அங்கே இருக்க... | 7 |
| எல்லாம் ஆரம்பித்தது எப்படி? | 8 |
| வாலிபர் பகுதி | 12 |
| சிறுவர் பகுதி | 13 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.S. (I.T.& M.)., M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,
**C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

### நம்பிக்கை T.V. யில்

வெள்ளி காலை
6 மணி முதல் 6-30 மணி


செய்தியாளர்
போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)


### தமிழன் T.V. யில்


ஞாயிறு காலை 6-45 மணி

செய்தியாளர்
சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**கிருபையுள்ள வார்த்தை
நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.**








**Advanced Bible Correspondence Courses Available in English.**

For Details:
**CHOATE BIBLE CORRESPONDENCE COURSE INSTITUTE**
P.O.Box 15, Arasaradi,
Madurai - 625 016. Tamilnadu

**கிருபையுள்ள வார்த்தை**
ராஜரீகமான ஆசாரியர்களுக்கு
ராஜாதி ராஜாவின் வார்த்தை

**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only
and
receive
The Voice of Truth
International Vol. 94**

ஆசிரியர் உரை

# ராஜரீகமான ஆசாரியர்கள்

P.C. பிலேமோன் ராஜா



நம்மில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்மை பாவங்களற கழுவி, நம்மை தேவனுக்கு முன்பாக இராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கிய சர்வவல்ல ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்கள், ஆசீர்வாதங்கள் மற்றும் ஜெபங்கள்!

இந்த ஆண்டு சிந்தனைக்காக, நாம் படிக்கும்படியாக தெரிந்துக்கொண்ட வசனத்தினை ஆராய்வதிலிருந்து, நாம் கடைபிடிக்க வேண்டியவைகளை அறிந்துக்கொள்வோம். **எரேமியா 31:14** <u>ஆசாரியர்களின் ஆத்துமாவைக் கொழுமையானவைகளினால் பூரிப்பாக்குவேன்; என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.</u>

## 1. ஆசரிப்பு கூடாரத்தின் மகிமை, மகத்துவம் என்ன?

**யாத் 25:9** "நான் உனக்குக் காண்பிக்கும் வாசஸ்தலத்தின் மாதிரியின்படியும், அதினுடைய எல்லாத் தட்டுமுட்டுகளின் மாதிரியின்படியும் அதைச் செய்வீர்களாக."

ஆசரிப்பு கூடாரம் என்பது, முழுக்க முழுக்க தேவனாலே திட்டமிடப்பட்ட ஒன்று; அதற்குள்ளே இருக்கின்ற தட்டு முட்டுக்கள் முதற்கொண்டு எல்லாமே தேவன் வடிவமைத்ததே! மோசே அவைகளை, தேவன் சொன்னபடியே செய்தார்.

இந்த ஆசரிப்பு கூடாரம் பரிசுத்த ஸ்தலம், மகாபரிசுத்த ஸ்தலம் என்று இரண்டு பிரிவுகளாக இருந்தது. பரிசுத்த ஸ்தலத்தில் குத்துவிளக்கு, தேவசமூக அப்ப மேஜை, தூப பீடம் போன்றவைகள் இருந்தன. மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே உடன்படிக்கை பெட்டியும், அதன் மேலே கிருபாசனமும் இருந்தது. அங்கே தேவனுடைய பிரசன்னம் இருந்தது (எபி 9:1-5). ஆயினும் ஆசாரிப்பு கூடாரமும், பழைய பிரமாணமும் நிழலாக இருக்கிறது. சபையும், புதிய பிரமாணமும் நிஜமாக இருக்கிறது (எபி 10:1-3).



ஆசரிப்பு கூடாரத்தை பற்றியும், எப்படி அதை செய்ய வேண்டும் என்பதை பற்றியும், அதற்குள்ளே என்ன செய்ய வேண்டும் என்பதை பற்றியும், தேவன் மாத்திரமே முடிவெடுத்தார். யாருக்கும் அதில் என்ன செய்ய வேண்டுமென முடிவெடுக்க உரிமை இல்லை. அதைவிட மேன்மையான கிறிஸ்துவின் சரீரமான சபைக்குள்ளும், என்ன செய்ய வேண்டும்? என்ன செய்ய வேண்டாம்? என்கிற முழு உரிமையும் தேவனுடையது தான். (எபி 9:6-14,23,24).

## 2. ஆசாரியன் என்பவன் யார்? அவனுடைய மேன்மை என்ன?

**எபி 5:4** "மேலும், ஆரோனைப்போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை". தேவனாலே அழைக்கப்பட்டு ஏற்படுத்தப்பட்டவர்கள். ஆசரிப்பு கூடாரத்திற்குள் எல்லாரும் செல்ல முடியாது. லேவிக்கோத்திரத்தாற்கு மட்டுமே அனுமதி உண்டு. அதற்குள்ளே செல்லுமுன் பலி கொடுக்க வேண்டும். பின்பு ஆசாரியர்கள் கழுவு தொட்டிக்கு சென்று தங்களை கழுவி சுத்திகரித்துக்கொண்டு, பிறகு தான் முதல் கூடாரத்திற்குள் செல்ல முடியும்.

அது நிழல், சபை என்பது நிஜமாக இருக்கிறது. நமக்காக பலியான இயேசுவை சந்தித்துவிட்டு, அவர் இரத்தத்தால் நமது பாவங்கள் கழுவப்படும்படியாக திருமுழுக்குப்பெற்று, அதற்கு பின்பு பரிசுத்த ஸ்தலமாகிய சபைக்குள் செல்ல பாக்கியம் பெறுகிறோம்.

ஆசாரிப்பு கூடாரத்திற்குள் செல்லும் பாக்கியம் ஆசாரியர்களுக்கு மாத்திரம்; அதேப்போல் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள்ளும், மீட்கப்பட்ட சகோதரனே! சகோதரியே! உனக்கு மட்டும் தான் பாக்கியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், இந்த ஆண்டை நம்முடைய பழக்க வழக்கத்தினை மாற்றிக்கொள்ளும் ஆண்டாக நாம் ஏற்படுத்திக்கொள்வோம்.

உன்னைப் பற்றி நீ யார் என்று தேவன்

அடையாளம் காட்டுகிறார். நீங்கள் ஞானமுள்ளவர்களானால் தேவன் உங்களுக்கு தந்த நிலையை,தாலந்துகளை, பெற்றுக்கொண்டவைகளை விருத்தியாக்க திட்டமிடுங்கள். புண்ணியத்தை அல்ல பரிசுத்தத்தை தேடுங்கள். ஏனெனில் புண்ணியம் பெற தயவு தாட்சணியம் தேவை. ஆண்டவர் நம்மை பரிசுத்தமாக்கி உயர்த்தி வைத்திருக்கிறார். தாழ்மையாக இருப்போம், அது சரியானது! ஆனால் என்னிடம் ஒன்றுமில்லை என தாழ்வுமனப்பான்மையோடு இருந்துவிடாதே! அது விசுவாசமின்மையாகும்.

1பேதுரு 2:9 "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்."

இது நடக்க போகிற காரியம் அல்ல, நடந்த காரியம்.



ஆம், அவர் நம்மை திருமுழுக்கிலே பரிசுத்தமாக்கி இருக்கிறார். அவர் நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கியிருக்கிறார். அவர் தான் நம்மை உயர்த்தியிருக்கிறார். விசுவாசம் விருத்தியாக பைபிளை நிறைய படியுங்கள்; வேத ஆராய்ச்சியில், சபை கூட்டங்களில் தவறாமல் பங்குபெற்று ஆசாரியனுக்குரிய ஆசீர்வாதத்தை உங்கள் பாத்திரங்களில் மொண்டுகொண்டு செல்லுங்கள்.

## 3. ஆசாரியனுடைய வேலைகள் என்னென்ன?

எபி 9:6–7 "இவைகள் இவ்விதமாய் ஆயத்தமாக்கப்பட்டிருக்க, ஆசாரியர்கள் ஆராதனை முறைமைகளை நிறைவேற்றும்படிக்கு முதலாங்கூடாரத்திலே நித்தமும் பிரவேசிப்பார்கள். இரண்டாங்கூடாரத்திலே பிரதான ஆசாரியன் மாத்திரம் வருஷத்திற்கு ஒருதரம் இரத்தத்தோடே பிரவேசித்து, அந்த இரத்தத்தைத் தனக்காகவும் ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் செலுத்துவான்."

இஸ்ரவேலின் கோத்திரங்கள் 12; ஆனால் 11 கோத்திரமும் இந்த ஆசாரியனுக்காக நிலத்தை வாங்கனும், விவசாயம் பண்ணனும், ஆடு, மாடு வளர்க்கனும்; ஆனால் ஆசாரியனோ 24 மணி நேரமும் ஆசாரிப்பு கூடாரத்திலேயே வேலை செய்ய வேண்டும். அதன் மகிமையும், மங்களமும் தொடர்ந்திட உழைக்க வேண்டும். ஆசரிப்பு கூடாரத்தை இருட்டாக்கி பரிசுத்த குலைச்சலாக்காதபடி, விளக்கை ஏற்ற வேண்டும், தூபம் காட்ட வேண்டும். அதனை துடைத்து சுத்தம் செய்ய வேண்டும். தேவன் மற்ற 11 கோத்திரத்தையும் வேலை செய்ய வைத்து, ஆசாரியனை கொழுமையானவைகளினால் செழிப்பாக்கினார்; இதை விசுவாசிக்க ஞானம் தேவை.

வசனத்தை திரும்ப திரும்ப படியுங்கள், வாசியுங்கள், கேள்வி கேட்டு படியுங்கள், காலை மாலை இரவு என படித்துக்கொண்டே இருங்கள். ஏனெனில், ஆசாரியன் ஆசரிப்பு கூடாரத்தின் விளக்கை அணையவிடாமல் எரிய வைக்க வேண்டும் என்பது நித்திய கட்டளை. வேதவசனமான தீபத்தை நீங்கள் எரிய வைத்துக்கொண்டே இருங்கள்.

வயிறு மப்பாக, மந்தமாக இருக்கிறதென்றால், அதற்கு மருந்தாக ஏதோ ஒன்று கொடுத்து சரிசெய்வது போல, வசன பசி இல்லாத ஆத்துமாவை சரி செய்து நீதியின் பசியை கிளரிவிடுங்கள்; வசனமாகிய மருந்தை கொடுத்து தாகத்தை தூண்டுங்கள்.

வசனத்தின் மீது பசி தாகம் கொண்டு வாசிக்க மட்டுமல்ல, ஆராய்ச்சி செய்யவும் கற்றுக்கொள்ளுங்கள் மத் 5:6 "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்."

உபா 33:8 "லேவியைக்குறித்து; நீ மாசாவிலே பரீட்சைபார்த்து, மேரிபாவின் தண்ணீரிடத்தில் வாக்குவாதம்பண்ணின உன் பரிசுத்த புருஷன் வசமாய் உன்னுடைய தும்மீம் ஊரீம் என்பவைகள் இருப்பதாக."

ஆசாரியனிடத்திலே ஊரிம் தும்மிம் இருக்க வேண்டும். ஊரிம் தும்மிம் என்பவைகள் என்ன? தேவனுடைய பிரசன்னம் உனக்கு இருக்கிறது. நீ பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே வரலாம் என்ற அனுமதியின் அடையாளம்.



பரிசுத்த பட்டயத்தை பத்திரப்படுத்துங்கள், இழந்து போகாதிருங்கள்; பரிசுத்த வஸ்திரத்தை தரித்துக்கொள்ள நேரமில்லை என சொல்லாதிருங்கள். ஏனெனில் அவர் நம்மை பரிசுத்தப்படுத்தி, மகிமை நிறைந்த உடையயை நமக்கு கொடுத்திருக்கிறார். தேவன் நமக்கு கிறிஸ்துவின் மூலமாய் கொடுத்த மீட்பை பத்திரப்படுத்திக்கொள்ளுங்கள். அது சாதாரணமானது அல்ல.

உபா 3:9 "தன் தகப்பனுக்கும் தன் தாய்க்கும்: நான் உங்களைப் பாரேன் என்று சொல்லி, தன் சகோதரரை அங்கிகரியாமல், தன் பிள்ளைகளையும் அறியாமலிருக்கிறவன் வசமாய் அவைகள் இருப்பதாக; அவர்கள் உம்முடைய வார்த்தைகளைக் கைக்கொண்டு, உம்முடைய உடன்படிக்கையைக் காக்கிறவர்கள்."

அப்பா, அம்மா, வேலை, படிப்பு என காரணம் சொல்லி அவருடையதை தவிர்ப்பவர்களை, அவர் வேண்டாம் என்கிறார். ஆசாரியனே! உனக்கு ஆசாரிப்பு கூடார வேலை தான் முக்கியம் என்று தெரிய வேண்டாமா? ஆசாரிப்பு கூடாரத்தில் வேலை இருக்கின்றபோது, மற்ற வேலைகளை செய்ய எனக்கு நேரமில்லை என, அவனது சிந்தை தான் நமக்கும் இருக்க வேண்டும் என உனக்கு தெரிய வேண்டாமா? வசனத்தை உள்ளே வைத்து காப்பாத்து, அதை கடைபிடி, அப்பொழுது உனக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை அவர் முடிவெடுப்பார்.

மாயையும், மனதுக்கு சஞ்சலமானதை விட்டு விலகுங்கள் (ரூ 4:4). கடந்த ஆண்டு இருந்தது போன்ற தோல்விகள் இந்த ஆண்டும் தொடர வேண்டாம். பரிசுத்த ஆவியை பெற்ற நான், ஆசாரிய வேலையை செய்ய வேண்டும் (எபே 1:13).

உபா 33:10 "அவர்கள் யாக்கோபுக்கு உம்முடைய நியாயங்களையும், இஸ்ரவேலுக்கு உம்முடைய பிரமாணத்தையும் போதித்து, உமது சந்நிதானத்திலே தூபவர்க்கத்தையும், உமது பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலிகளையும் இடுவார்கள்."

ஆண்களே! ஆசாரியனாக தலைமை தாங்க கற்றுக்கொள்ளுங்கள். உங்கள் வீடு என்னும் ஆசரிப்பு கூடாரத்தில் தினமும், வேத வாசிப்பு என்னும் தீபத்தையும், ஜெபம் என்னும் தூபத்தையும் தேவனுக்கு குடும்பமாக செலுத்துங்கள். யோபு தன் பிள்ளைகளுக்காக பலியை கொடுத்தது போல, உதடுகளின் கனிகளாகிய ஸ்தோத்திர பலியை 365 நாட்களும் உங்கள் தேவனுக்கு செலுத்துங்கள் (எபி 13:15).

உங்கள் ஜெபம் துதியும், ஸ்தோத்திரமும் நிறைந்ததாக இருக்கட்டும். வெறுமனே உங்களது சரீர தேவைக்கானதாக இருந்துவிட வேண்டாம். தேவ பிரசன்னம் இருக்கிற இடத்தில் துதியும், ஸ்தோத்திரமும் இருக்க வேண்டும். மற்றவர்களுக்காகவும் ஜெபியுங்கள். ஆசாரியனின் வேலை பிறருக்காக பலியிடுவது; ஆகையால் சபையில் ஜெபக்குறிப்புகள் சொல்லும் போது, அவைகளை குறித்துக்கொண்டு ஜெபியுங்கள். மேலும் உங்கள் ஜெபங்களில் பாவ அறிக்கை இருக்கட்டும்.

## 4. ஆசாரியனுக்கான பாதுகாப்பும், ஆசீர்வாதமும்

உபா 33:11 "கர்த்தாவே, அவன் சம்பத்தை ஆசீர்வதித்து, அவன் கைக்கிரியையின்மேல் பிரியமாயிரும்; அவனைப் பகைத்து அவனுக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் திரும்ப எழுந்திராதபடி அவர்களுடைய இடுப்புகளை நொறுக்கிவிடும் என்றான்." ஆசாரியின் சம்பத்தை ஆசீர்வதித்து, அவனுக்கு எதிரானவர்களுக்கு எதிரே நின்று தேவன் ஆசாரியனை பாதுகாக்கிறார்.



ஆசாரியனுக்கான பாதுகாப்பும், ஆசீர்வாதமும் ஆசாரிப்பு கூடாரத்திற்குள்ளே இருந்தது போல, திருமுழுக்கு பெற்று இரட்சிக்கப்பட்ட சகோதரனே! சகோதரியே! உனக்கான ஆசீர்வாதமும் பாதுகாப்பும் சபைக்குள்ளே தான் இருக்கின்றது.

சபைக்குள்ளே உனக்கு மகிமை இருக்கிறது, செழுமை இருக்கிறது, விருத்தி மற்றும் பாதுகாப்பு இருக்கிறது. சபைக்குள்ளே விருத்தியை தேவன் வைத்திருக்கிறார். புத்திசாலியாக இருந்தால் அதை எடுத்து அநுபவிக்கலாம்.

சபைக்குள்ளே இருக்கிற நீ ஆசீர்வதிக்கப்பட்டவன்; ஆசீர்வாத பொக்கிஷ சாலைக்குள் இருக்கிறாய். எனக்கு அநேகரை ஆசீர்வதிக்கிற கிருபையை தாரும் என ஜெபி! ஏனெனில் நீ ஆசீர்வாதம் உள்ளவன்.

எரே 31:25 "நான் விடாய்த்த ஆத்துமாவைச் சம்பூரணமடையப்பண்ணி, தொய்ந்த எல்லா ஆத்துமாவையும் நிரப்புவேன்." அவர் விடாய்த்த ஆத்துமாவை சம்பூரணமடைய செய்கிற தேவனாகயிருக்கிறார். நாம் பொக்கிஷ சாலைக்குள், ஆசீர்வாதத்தின் மையத்தில் இருக்கிறோம். இந்த ஆசீர்வாதம் எளிதாக வரவில்லை, கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்கு பலி செலுத்தப்பட்டதினாலே வந்தது. சபைக்குள்ளான வாழ்வு என்பது பாவம் நீங்கி பரிசுத்தமான வாழ்வு; திருவிருந்தில் பங்குபெறுகின்றன வாழ்வு; பெற்றுக்கொண்ட திருமுழுக்கின் வாழ்வு நம்மை ஆசீர்வாதத்தின் மையத்தில் கொண்டுபோய் வைத்திருக்கிறது.

"கொடூரமானவர்களின் சீறல் மதிலை மோதியடிக்கிற பெரு வெள்ளத்தைப்போல் இருக்கையில், நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர். வறட்சியான இடத்தின் காங்கை மேகத்தினால் தணிவதுபோல, அந்நியரின் டும்முரத்தைத் தணியப்பண்ணுவீர்; மேகத்தின் நிழலினால் வெயில் தணிகிறதுபோல் பெலவந்தரின் ஆரவாரம் தணியும். சேனைகளின் கர்த்தர் இந்த மலையிலே சகல ஜனங்களும் ஒரு விருந்தை ஆயத்தப்படுத்துவார்; அது கொழுமையான பதார்த்தங்களும், தெளிந்த பழமையான திராட்சரசமும் நிறைந்த விருந்தாயிருக்கும்." (ஏசா 25:4–6)

ஆசரிப்பு கூடாரத்திற்குள்ளே இருக்கிறவனுக்கு தனி ஆசீர்வாதம் மற்றும் பாதுகாப்பு இருக்கிறது. ஏனெனில் அவன்மேல் தேவனுடைய பார்வை மீது இலகுவாயிருக்கிறது.

ஆசாரியனுக்கென்று தனி ஆசீர்வாதம் மற்றும் பாதுகாப்பு இருக்கிறது. எரே 33:9–11 "நான் அவர்களுக்குச் செய்யும் நன்மையையெல்லாம் கேட்கப்போகிற பூமியின் எல்லா ஜாதிகளுக்கு முன்பாக அது எனக்கு மகிழ்ச்சியுள்ள கீர்த்தியாயும் புகழ்ச்சியாயும் மகிமையாயும் இருக்கும்; நான் அவர்களுக்கு அருளிச்செய்யும் எல்லா நன்மையினிமித்தமும், எல்லாச் சமாதானத்தினிமித்தமும் இவர்கள் பயந்து நடுங்குவார்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார். மனுஷனில்லாமலும் மிருகமில்லாமலும் அவாந்தரவெளியாய்க் கிடக்கிறதென்று, நீங்கள் சொல்லுகிற இவ்விடத்திலும், யூதாவின் பட்டணங்களிலும் மனுஷனாவது மிருகமாவது இல்லாத பாழான எருசலேமின் வீதிகளிலும்,இன்னும் களிப்பின் சத்தமும், மணவாளனின் சத்தமும், மணவாட்டியின் சத்தமும்: சேனைகளின் கர்த்தரைத் துதியுங்கள், கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளதென்று சொல்லுகிறவர்களின் சத்தமும், கர்த்தருடைய ஆலயத்துக்கு ஸ்தோத்திரபலிகளைக் கொண்டுவருகிறவர்களின் சத்தமும் கேட்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்;



அவர்கள் முன்னிருந்தது போலிருக்கும்படி தேசத்தின் சிறையிருப்பைத் திருப்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்."

உங்களை பணிவிடைக்காரர்களாக மாற்றுங்கள், தாழ்மையாயிருங்கள். சபையின் வளர்ச்சிக்காக சரீரம், மனம், ஆன்மாவிலே வேலை செய்யுங்கள் (ஏசா 61:6). அவர் வீட்டின் நன்மையால் உங்களை திருப்தியாக்குவார் (சங் 65:4).

கொஞ்ச காலம் இருந்த நிழலுக்கே இவ்வளவு பாதுகாப்பு என்றால், நாம் (சபை) பரலோகம் வரை செல்லப்போகிறோமே, நம்மை எப்படி பாதுகாப்பார் என்பதை யோசித்து பாருங்கள்!

## ராஜரீகமான ஆசாரியன்

ஆசாரியன் நான் ஆசாரியன் நான்
ராஜரீகமான ஆசாரின் நான்
ராஜாதி ராஜாவின் ஆசாரியன்
கர்த்தாதி கர்த்தாவின் ஆசாரியன்
தேவாதி தேவனின் ஆசாரியன்
தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசாரியன்!

பலிபீட சிலுவையிலே
பலியானார் தேவ ஆட்டுக்குட்டி
அவர் சிந்தின இரத்தத்தினால்
கழுவப்பட்டதால் நான் ஆசாரியன்!


தினந்தோறும் வசனமாகிய
தீபத்தை போதித்து
அநேகர் வாழ்வில் பாவ இருளை
அகல செய்வதால் நான் ஆசாரியன்!

இடைவிடாமல் தூபமாகிய
ஜெபத்தை ஏறெடுத்து
ஜாமக்காரனைப் போல
விழித்திருப்பதால் நான் ஆசாரியன்!

வாரத்தின் முதல்நாள் தோறும்
தேவ அப்பமாகிய
கிறிஸ்துவின் பந்திதனில்
பங்குபெறுவதால் நான் ஆசாரியன்!

பரிசுத்த ஸ்தலமாகிய
சபைக்குள் இருப்பதாலும்
மகா பரிசுத்த ஸ்தலமாகிய
பரலோகிற்கு செல்லப்போவதாலும்
நான் ஆசாரியன்! ராஜரீக ஆசாரியன்!

# நான் அங்கே இருக்க வேண்டுமா? Do I Need to be There?



இன்று அநேக கிறிஸ்தவர்கள் கேட்கும் கேள்வி, "சபையின் எல்லா கூடுகை நேரங்களிலும், நான் அங்கே இருக்க வேண்டுமா?" என்பதே! இந்த கேள்வி, உலக அழுத்தம் மற்றும், உலக இச்சைகளினால் அவர்களுக்குள் யதார்த்தமாக எழும்பினாலும், தேவனுடைய மனிதன் (உலகத்தைவிட ஆவிக்குரியவைகளின் மீது தாகம் உடையவன்) இதை எவ்வாறு அனுக வேண்டும் என சிந்திப்போம்.

**1 இராஜா 9 :3** "கர்த்தர் அவனை நோக்கி : நீ என் சமுகத்தில் செய்த உன் விண்ணப்பத்தையும் உன் வேண்டுதலையும் கேட்டேன்; நீ கட்டின இந்த ஆலயத்தில் என் நாமம் என்றைக்கும் விளங்கத்தக்கதாக, அதைப் பரிசுத்தமாக்கினேன்; என் கண்களும் என் இருதயமும் எந்நாளும் அங்கேயிருக்கும்."

மேற்காணும் வசனத்தில் நாம் தெளிவாகக் காண்பது என்னவெனில், தேவன் தம்முடைய ஆலயத்தில் இருக்கிறார்; மேலும் இருக்கும்படி மிகவும் விரும்புகிறார்.

இதை நன்கு உணர்ந்த, தாவீதின் ஆசையை கீழ்காணும் வசனங்களில் காண்போம்.

**சங் 27 : 4** "கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையை பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்."

இந்த வசனத்தில் தாவீது, தன் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருக்கும்படி விரும்புகிறார். அதுமட்டுமல்ல, அதற்கான காரணமாக அவர் கூறுவது கர்த்தருடைய மகிமையைப் பார்க்கவும், ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும்படியாகவும் என்பதே!

இன்று புதிய ஏற்பாடு கிறிஸ்தவர்களாகிய நாமே ஆலயமாக இருப்பினும் **(1.கொரி. 3:16)**,கிறிஸ்துவின் இரத்தத்தினாலே உண்டான சபையாக நாம் கூடும்போது தான் அவருடைய பிரசன்னம் நம்மிடையே உள்ளது **(மத் 18:20)**. மேலும் சபையாக கூடும் நேரங்களை தவறவிடாமல் இருக்க வலியுறுத்தப்படுகிறோம் **(எபி 10:24-29)**. தாவீதை போல் நாமும் சபை என்னும் தேவசமுகத்திற்கு எப்பொழுதும் கூடி வந்து அவருடைய மகிமையைக் காண்போம்! மேலும், வேதத்தில் உள்ள பொக்கிஷங்களை ஆராய்ச்சி செய்வோம்!

இன்னும் ஆழமாக சங்கீதக்காரனின் மனதை இவ்விஷயத்தில் அறிந்து கொள்ள, நீங்களே கீழ்காணும் வசனங்களை வாசித்து, அவர் எதினால் தேவ சமுகம் வர வரும்பினாா் என கண்டறிந்து எழுதி அனுப்புங்கள்!

**சங் 26:8; சங் 23:6; சங் 65:4; சங் 84:4;சங் 63:2; சங் 84:10;**

பிரியமானவர்களே! இந்த புத்தாண்டில்,புதிய தீர்தானத்துடன் சபையின் எல்லா கூடுகைகளிலும் பங்கு பெறுவோம். இது நம்முடைய கடைம மட்டுமல்ல; நமது உரிமையும் கூட! **லூக் 10:42** – "தேவையானது ஒன்றே,மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார்."

– கிங்ஸ்லி ராஜா
(இணை ஆசிரியர்)

## சிறுவர்கான கேள்விகள்

குட்டீஸ்! கீழே, ஆசரிப்பு கூடாரத்தில் இருந்த 7 காரியங்களைக் குறிக்கும் சொற்கள் கலைந்துள்ளன. அவைகளை கண்டுபிடியுங்கள். **(யாத் 25-40)**

1. சீ தி லை ரை ச்
2. பா ரு ச கி ம் ன
3. க ப ற் ல கை
4. னா ன் ம
5. க தூ ல ம் ச ப
6. து த் கு வி கு ள க்
7. உ ன் ட ப க் டி கை ட் டி பெ

## சென்ற மாதம் விடுபட்டவர்கள்

1. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
2. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் – வளர்நகர்

# பாடம் : 2 - எல்லாம் ஆரம்பித்தது எப்படி ?

முகவுரை : எக்காலத்திலும் மனிதன் ஆழ்ந்து சிந்தித்திருக்கிறான். வானமும், பூமியும், ஜீவஜந்துக்களும், முதல் முதல் எப்படி துவங்கின : யுக்தியான பல சிந்தாதங்கள் மூன்று கூறுவது "நட்சத்திரக்கூட" கொள்கை, என்றெல்லாம் வேதாகமம் கற்பனை செய்கிறதில்லை. எப்படி எல்லாம் உண்டாயிற்று என்பதைப் பற்றி, இக்காரியம் உண்மையாக சம்பவித்த ஓர் நிகழ்ச்சியென்று கூறுகிறது வேதாகமம்.

**I. "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்." ஆதிகாமம் 1:1.**

அ. பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது (வசனம் 2).

ஆ. ஆழத்தின்மேல் இருள் இருந்தது (வசனம் 2).

இ. தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார் (வசனம் 2).

ஈ. தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார் (வசனம் 3).

(a). வெளிச்சம் உண்டாயிற்று

(b). வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார் (வ. 4).

உ. வெளிச்சத்தையும் இருளையும் தேவன் வெவ்வேறாகப் பிரித்தார் (வசனம் 4).

ஊ. தேவன் வெளிசத்துக்கு பகல் என்று பெயரிட்டார் (வசனம். 5).

எ. தேவன் இருளுக்கு இரவு என்று பெயரிட்டார் (வசனம்.5)

ஏ. சாய்ங்காலமும் விடியற்காலமுமாகி முதலாம் நாளாயிற்று (வசனம் 5).

**II. தேவன் ஜலத்தின் மத்தியில் ஆகாயவிரிவு உண்டாக்கடவது என்றும், அது ஜலத்தினின்று ஜலத்தைப் பிரிக்கக்கடவது என்றும் சொன்னார் (வசனம் 6).**

அ. தேவன் ஆகாய விரிவை உண்டு பண்ணினார். (1:7)

ஆ. ஆகாயவிரிவு அதற்குக் கீழே இருக்கிற ஜலத்தையும் அதற்கு மேலே இருக்கிற ஜலத்தையும் பிரித்தது (வசனம் 6:7)

கவனிக்கவும் : நாம் சாதரணமாக "வானம்" என்று சொல்வதே இந்த "ஆகாய விரிவு"

இ. தேவன் ஆகாய விரிவுக்கு வானம் என்று பெயரிட்டார் (வசனம் 8).

ஈ. சாயங்காலமும் விடியற்காலமுமாகி இரண்டாம் நாளாயிற்று (வசனம் 8).

**III. பின்பு தேவன் : வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படக்கடவது என்றார் (வசனம் 9).**

கவனிக்கவும் : தேவனுடைய வார்த்தை எவ்வளவு வல்லமையுடையது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். ஒவ்வொரு தனிப்பட்ட சிருஷ்டிப்பிலும் தேவன் வார்த்தையை மட்டும் சொன்னார்; சொன்னபடி ஆயிற்று.

அ. தேவன் வெட்டாந்தரைக்கு பூமி என்று பெயரிட்டார் (வசனம் 10).

ஆ. சேர்ந்த ஜலத்திற்கு சமுத்திரம் என்று பெயரிட்டார் (வசனம் 10).

இ. தேவன் அது நல்லது என்று கண்டார்

ஈ. தேவனானவர், பூமியானது:

1. புல்லையும்,
2. விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும்,

(a). கனிகளைத் தங்கள் ஜாதியின்படி கொடுக்கும் விருட்சங்களையும்

(b). தங்களில் தங்கள் விதையையுடைய விருட்சங்களையும், முளைப்பிக்கக் கடவது என்றார்.

உ. அது அப்படியே ஆயிற்று (வசனம் 11). பூமியானது:

1. புல்லையும்,
2. விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும்,
3. கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது

ஊ. தேவன் அது நல்லது என்று கண்டார் (வசனம் 12).

எ. சாயங்காலமும் விடியற்காலமுமாகி மூன்றாம் நாள் ஆயிற்று (வசனம் 13).

**IV. தேவன்: பகலுக்கும் இரவிற்கும் வித்தியாசம் உண்டாக்கத்தக்கதாக; வானம் என்கிற ஆகாய விரிவிலே சுடர்கள் உண்டாகக் கடவது! அவைகள் அடையாளங்களுக்காகவும், காலங்களையும், வருஷங்களையும் குறிக்கிறதாகவும் இருக்கக்கடவது! அவைகள் பூமியின்மேல் பிரகாசிக்கும்படிக்கு வானம் என்கிற ஆகாய விரிவிலே சுடர்களாகக் கடவது! என்றார்; அது அப்படியே ஆயிற்று (வசனம் 14,15).**

அ. தேவன் இரண்டு மகத்தான சுடர்களை உண்டாக்கினார்:

1. பகலை ஆள பெரிய சுடரும் (வசனம் 16).
2. இரவை ஆளச் சிறிய சுடரும் (வசனம் 16).

ஆ. அவர் நட்சத்திரங்களையும் உண்டாக்கினார் (வசனம் 16)

இ. தேவன் அவைகளை வானம் என்கிற ஆகாய விரிவிலே வைத்தார் (வசனம் 18).

1. பூமியின் மேல் பிரகாசிக்கிறதற்காக (வசனம் 17)
2. பகலை ஆள (வசனம் 18).
3. வெளிச்சத்துக்கும் இருளுக்கும் வித்தியாசம் உண்டாக்க (வசனம் 18).

ஈ. தேவன் அது நல்லது என்று கண்டார்.

உ. சாயங்காலமும் விடியற்காலமுமாகி நாலாம் நாள் ஆயிற்று (வசனம் 19).

**V. பின்பு தேவன் : ஜலமானது நீந்தும் ஜீவ ஜந்துக்களையும், பூமியின் மேல் வானம் என்கிற ஆகாய விரிவிலே பறக்கும் பறவைகளையும், திரளாய் ஜெநிப்பிக்கக்கடவது என்றார் (வசனம் 20)**

அ. தேவன் பெருந்திமிங்கலங்களையும் சகல வித நீர் வாழும் ஜந்துக்களையும் சிருஷ்டித்தார் (வசனம்21)

ஆ. ஜலம் தங்கள் தங்கள் ஜாதியின்படியே திரளாய் ஜெநிப்பித்தது (வசனம் 21)

இ. சகலவித பறக்கும் பட்சிகளையும் (வசனம் 21)

ஈ. தேவன் அது நல்லது என்று கண்டார் (வசனம் 21)

உ. தேவன் அவைகளை ஆசீர்வித்து. நீங்கள் பலுகிப் பெருகி, சமுத்திர ஜலத்தை நிரப்புங்கள் என்றும் பறவைகள் பூமியில் பெருகக் கடவது என்றும் சொன்னார்.

ஊ. சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஐந்தாம் நாள் ஆயிற்று (வசனம் 23).

**VI. தேவன் : “ பூமியானது ஜாதி ஜாதியான ஜீவ ஜந்துக்களாகிய நாட்டு மிருகங்களையும் ஊரும் பிராணிகளையும், காட்டு மிருகங்களையும், ஜாதி ஜாதியாக பிறக்கக்கடவது” என்றார். அது அப்படியே ஆயிற்று (வசனம் 24).**

அ. தேவன் உண்டாக்கினது :

1. பூமியிலுள்ள ஜாதி ஜாதியான காட்டு மிருகங்கள் (வசனம் 25).
2. கால்நடை (வசனம் 25).

ஆ. தேவன் அது நல்லது என்று கண்டார்.

இ. பின்பு தேவன் : நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக: அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார் (வசனம். 26).

1. தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார் (வசனம் 27)

(a) தேவனுடைய சாயலில் அவனை சிருஷ்டித்தார்.

(b) ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார்

2. தேவன் அவர்களை ஆசீர்வதித்து சொன்னதாவது :

(a) பலுகிப் பெருகி.

(b) பூமியை நிரப்பி, அதை கீழ்ப்படுத்தி.

(c) ஆண்டு கொள்ளுங்கள்:

சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும்.

3. பின்னும் தேவன் இதோ, பூமியின் மேல் எங்கும் விதைதரும் சகலவிதப் பூண்டுக்களையும், விதைதரும் கனி மரங்களாகிய சகல வித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன். அவைகள்உங்களுக்கு ஆகாரமாயிருக்கக் கடவது. பூமியிலுள்ள சகல மிருகஜீவன்களுக்கும், ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும், பூமியின் மேல் ஊரும் பிராணிகள் எல்லாவற்றிற்கும் பசுமையான சகல பூண்டுகளையும் ஆகாரமாகக் கொடுத்தேன் என்றார். (வசனங்கள் 29,30).

ஈ தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது (31).

உ. சாயங்காலமும், விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று. (வசனம் 31).

VII. இவ்விதமாக வானமும் பூமியும், அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப்பட்டு தீர்ந்தன (ஆதியாகமம் 2:1).

அ. ஏழாம் நாளிலே தாம் உண்டாக்கின கிரியையெல்லாம் தேவன் முடித்தார் (வசனம் 2).

ஆ. தேவன் ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார் (வசனம் 2).

இ. தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து அதைப் பரிசுத்தமாக்கினார். (தாம் உண்டுபண்ணின கிரியைகளையெல்லாம் முடித்து ஓய்ந்திருந்தபடியால்) (வசனம் 3).

பொதுவான செய்திகள்

## இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழர்கள்



**வீர அழகுமுத்துக்கோன் (1728 - 1757)**

- கட்டாலங்குளம் சீமையின் அரசராக இருந்தவர்.
- ஜெகவீரராமபாண்டிய எட்டப்பன் என்கிற எட்டயபுரம் மன்னருக்கு, சிறந்த நண்பராக விளங்கினார்.
- இந்தியாவின் முதல் விடுதலை போர் 1857 என்று அறியப்படுகிறது.
- ஆனால், அதற்கு முன்பே இந்தியாவின் பல இடங்களில் போர் நடந்துள்ளது. அதில் முதன்மையானவர் மன்னர் வீர அழகு முத்துக்கோன்.
- முதன் முதலாக ஆங்கிலேயர்களை எதிர்த்தும், பாளையக்காரர்கள் ஆங்கிலேயருக்கு கப்பம் கட்டுவதை தடுக்கவும் செய்தார்.
- இதனால் கோபமுற்ற ஆங்கிலேய அரசு, பிரிட்டிஷ் ஜெனரல் முகம்மது யூசுப்கானை அனுப்பி வைத்தது. வீர அழகு முத்துக்கோனுக்கும் முகம்மது யூசுப் கானுக்கும் பெத்தநாயக்கனூர் கோட்டையில் போர் நடந்தது.
- வீர அழகு முத்துவின் வலது கால் சுடப்பட்டது. இருப்பினும் 3 மணி நேரம் போர் தொடர்ந்தது. இறுதியில் வீர அழகு முத்துக்கோனும் அவருடைய 6 தளபதிகள் மற்றும் 248 போர் வீரர்களும் இரும்பு சங்கிலியால் பிணைக்கப்பட்டு நடுக்காட்டூர் என்னும் இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர்.
- பீரங்கி முன் நிறுத்தப்பட்டு வரி செலுத்துமாறு வற்புறுத்தப்பட்டனர். மன்னிப்பு கேட்டால் உயிர் மிஞ்சும் என்று கேட்டும், வீர அழகு முத்துக்கோன் மன்னிப்பு கேட்க மறுத்துவிட்டார்.
- பிறகு 248 வீரர்களின் வலது கரங்கள் வெட்டி சாய்க்கப்பட்டன.
- பீரங்கி முன் நின்ற வீர அழகு முத்துக்கோனும் அவருடைய 6 தளபதிகளும் மார்பில் சுடப்பட்டு வீர மரணம் அடைந்தனர். பீரங்கி முன் நின்று சாகும் தருவாயிலும் தன்னைச் சேர்ந்தவர்களை காட்டிக்கொடுக்க மாட்டேன் என்று கூறிய நெஞ்சுரம் மிக்கவர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தனி நபர் வேத ஆராய்ச்சியில், வேதாகமம் முழுவதையும் தியானம் செய்ய உதவும் தொடர் பாடங்கள்!

# தொடர் 26 லூக்கா : கிறிஸ்து, மனுஷகுமாரன்

### தலைப்பு

லூக்கா சுவிசேஷம் அதை எழுதியவரின் பெயரைக் கொண்டுள்ளது. தொடக்ககாலக் கிறிஸ்தவ எழுத்தாளர்களில் பலர் "பிரியமான வைத்தியனாகிய" லூக்காவை (கொலோசெயர் : 4:14) இதன் எழுத்தாளர் என்று அடையாளப்படுத்தியுள்ளனர். இந்த நிலைப்பாட்டை இப்புத்தகத்தின் உள்ளான ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன (உதாரணமாக, இதன் எழுத்தாளர் மருத்துவ சொற்றொடர்கள் பலவற்றைப் பயன்படுத்தியிருக்கின்றார்).

### பின்னணி

லூக்காவின் விவரத்தைப் பொறுத்தமட்டில், அறிமுகப்பகுதியில் (1:1–4) தியோப்பிலு ("தேவப்பிரியர்") என்பவருக்கு இந்நூல் எழுதப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் என்பது தனிச்சிறந்த விஷயமாக உள்ளது. இந்த அறிமுகம் லூக்கா இயேசுவின் வாழ்நாள் காலத்தின் போதல்ல, ஆனால் பிற்பாடு ஒருவேளை பவுலினால் போதிக்கப்பட்டு சீஷராகியிருக்கலாம் என்று முடிவு செய்யும்படி நம்மை வழிநடத்துகிறது. இந்த அறிமுகமானது, லூக்கா பரிசுத்த ஆவியானவருக்காக எழுதுபவராக மாத்திரமல்ல, ஆனால் அவர் "உண்மையில் நடந்தவற்றை" பற்றிய தனிப்பட்ட ஆய்வை மேற்கொண்டார் என்பதையும் காட்டுகிறது. பவுலுக்குத் தரப்பட்ட விசேஷித்த வெளிப்படுத்துதல் (1 கொரிந்தியர் 11:23) என்பது லூக்காவுக்குக் கிடைத்திருந்த ஆதாரமூலங்களில் ஒன்றாக இருந்திருக்க வேண்டும். இயேசுவின் தாயான மரியாளிடத்தில் இருந்து வந்ததான கிறிஸ்துவின் தொடக்ககால வாழ்வுபற்றிய தகவல்களையும் பாரம்பரியம் கொண்டுள்ளது.

லூக்காவின் சுவிசேஷம் தனது தொடர்நூல் ஒன்றைக் கொண்டுள்ளது என்பதும் இதன் இன்னொரு தனிச்சிறப்பு விஷயமாக உள்ளது: நடபடிகள் என்ற புத்தகம் அந்தத் தொடர் நூலாகும் (இவற்றுடன் 1:1–4 மற்றும் நடபடிகள் 1:1). நடபடிகள் புத்தகத்தில் தன்மைப் பெயர்ச்சொல் கொண்ட வசனப்பகுதிகள் (நடபடிகள் 16:10; 20:5; 21:1; முதலியன). லூக்கா அடிக்கடி பவுலுடன் பயணம் செய்தார் என்று நமக்குக் கூறுகின்றன. சமீபத்திய புதைபொருள் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள், லூக்கா ஒரு மிகச்சரியான வரலாற்றாளராயிருந்து, இயேசுவின் வாழ்வு மற்றும் அதைத்தொடர்ந்த நிகழ்ச்சிகளுக்கு மாபெரும் கனம் கொடுத்திருந்தார் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

மாற்குவைப்போல் லூக்காவும் யூதரல்லாத மக்கள் கூட்டத்திற்கு எழுதினார் என்பது உறுதி. இருப்பினும், மாற்குவின் சுவிசேஷ விவரம், செயல்பாட்டு அமைவு கொண்ட ரோமர்களுக்கு எழுதப்பட்டிருக்க, லூக்காவின் சுவிசேஷ விவரம், மதிநுட்பம் வாய்ந்த மாணவருக்கு எழுதப்பட்டதாகக் காணப்படுகிறது. லூக்கா தமது சிந்தையில் கிரேக்க மக்கள் கூட்டத்தைக் கொண்டிருந்தார் என்று பலர் முடிவு செய்கின்றனர். லூக்கா தாமே ஒரு கிரேக்கராய் இருந்தார் என்றால் (இது சாத்தியமானதே; கொலோசெயர் 4:10, 11,14 ஆகிய வசனங்களைப் படிக்கவும்), அவர் ஒருவர்தாம் புதிய ஏற்பாட்டில் யூதரல்லாத ஒரே எழுத்தாளராய் இருந்தார் என்றாகிறது.

லூக்காவின் சுவிசேஷம், "மனுஷகுமாரனான," இயேசுவின் பூரணமான மனிதத்துவத்தை வலியுறுத்துகிறது, இது "தேவகுமாரனான" இயேசுவின் தெய்வீகத்தை வலியுறுத்தும் யோவான் சுவிசேஷத்திற்கு நேர்மாறானதாக உள்ளது. இப்புத்தகத்தின் கருத்து 19:10ல் தொகுத்துரைக்கப்பட்டுள்ளது; "இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்."

நடபடிகள் புத்தகம் திடீரென்று முடிவடைந்தால், லூக்கா தமது எழுத்தை அனேகமாக கி.பி. 62ல், ரோமாபுரியில் பவுல் முதல்முறை விசாரிக்கப்படுவதற்கு முன்பு முடித்திருக்க வேண்டும். நடபடிகள் புத்தகத்தை எழுதுவதற்குச் சற்றுகாலம் முன்னதாக லுக்கா தமது சுவிசேஷ விவரத்தை எழுதியிருப்பார் என்றால், அவர் அதை எழுதிய காலம் கி.பி. சுமார் 60–62 ஆக இருந்திருக்கும். இவ்விதமாக, மூன்று ஒப்பீட்டு சுவிசேஷங்களும் 60களின் முந்திய ஆண்டுகளில் எழுதி முடிக்கப்பட்டன (மத்தேயு மற்றும் மாற்கு ஆகிய சுவிசேஷப் புத்தகங்களுக்கான குறிப்புகளைக் காணவும்).

தொடரும்...

# உண்மையாக இருப்போம்

அன்பானவர்களே! பரிசுத்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே வாழ்த்துகிறேன். உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். புதிய ஆண்டில் கிறிஸ்துவுக்குள் எடுத்திருக்கிற ஒவ்வொரு தீர்மானத்திலும் நிலைத்திருந்து வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

தீர்மானங்களில் நிலைத்திருக்க விசுவாசம் எந்த அளவுக்கு முக்கியமோ, அதே அளவுக்கு தீர்மானத்தின் மீதான உண்மையான பற்றுதலும் அவசியம்! ஏனென்றால் **சங் 51:6 ல், "இதோ, உள்ளத்தில் உண்மையாயிருக்க விரும்புகிறீர்;..."** என்று கூறுகிறது. தேவனுடைய எதிர்பார்ப்பு இது. நம்முடைய தீர்மானம் உண்மையாக இருக்குமென்றால், அது உள்ளத்தில் ஆழத்தில் இருக்குமென்றால் நிச்சயமாக தேவன் விரும்புகிற ஒருவராக நம்மால் இருக்க முடியும்.

இல்லையென்றால், பொய் பேசுகிற ஒருவராக, வார்த்தையில் உண்மையில்லாதவராக, புறங்கூறுகிறவராக, இருமனமுள்ளவராக, சபிக்கிறவராக, வாக்குவாதம் பண்ணுகிறவராக இருந்தால், நாம் குடும்பத்திலும், தேவனிடத்திலும் கைவிடப்பட்ட ஒருவராக நிலையற்றுதிரிகிறவராகவே இருக்கும் நிலை வரும். சில வேத வசனங்களை வாசிப்போம்

**சகரியா 8:16,17 –** நீங்கள் செய்ய வேண்டிய காரியங்கள் என்னவென்றால்; அவனவன் பிறனோடே உண்மையைப் பேசுங்கள்; உங்கள் வாசல்களில் சத்தியத்துக்கும், சமாதானத்துக்கும் ஏற்க நியாயந்தீருங்கள்.

ஒருவனும் பிறனுக்கு விரோதமாய்த் தன் இருதயத்தில் தீங்கு நினையாமலும், பொய்யாணையின் மேல் பிரியப்படாதலும் இருங்கள்; இவைகளெல்லாம் நான் வெறுக்கிற காரியங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பார்த்தீர்களா! உண்மையை பேசவும், தீங்கை நினைக்க வேண்டாமென்றும் தேவன் ஆலோசனை சொல்லுகின்றார். உங்களுடைய தீர்மானத்தில் நிலைத்திருக்க வேண்டுமா? உண்மையாயிருங்கள், தேவ ஆலோசனையின்படி நடவுங்கள்!

**எசே 18:9** என் கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு, உண்மையாயிருபோனாகில் அவனே நீதிமான்; அவன் பிழைக்கவே பிழைப்பான் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

உண்மையாயிருப்பதின் பலன்களை மீண்டும் தேவன் கூறுகிறார். எனவே, தேவன் வெறுக்கும் காரியங்களை வெறுத்து, அவர் விரும்பும் உண்மையை பற்றிக்கொண்டு வாழ்ந்தால் நிச்சயமாகவே ஆசீர்வதிக்கிறவராயிருக்கிறார். **நீதி 28:20.** உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களை பெறுவான் என்று கூறுகிறது. எனக்கன்பன வாலிபர்களே! இந்த வருட துவக்கத்திலிருந்து உண்மையாய் தேவனுக்குள் நிலைத்திருக்க வேண்டும் என்றும், கிறிஸ்துவுக்குள் எடுத்திருக்கிற தீர்மானங்களில் உண்மையாய் இருந்து பரிபூரண ஆசீர்வாத பெற வேண்டுமென்று முடிவெடுங்கள். கர்த்தர் உங்களோடு இருப்பாராக!

– ஜோசப் பிரதீப்

**சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்**

1. G. பிளஸ்ஸி பிரசன்னா – வேப்பங்கனேரி
2. ஜெயசுதா தேவசகாயம் – சென்னை
3. A. கெனித்சாம் பெஞ்சமின் – மதுரை
4. D. ஜேசன் ஆல்பிரட் தாஸ் – திருப்பத்தூர்
5. D. ஜோயல் இவாஞ்சலின் – திருப்பத்தூர்
6. M. வின்செண்ட் – கோவை

# சபை கூடுமிடத்தில் வேலை செய்வோம்

ஹாய் குட்டீஸ்! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் புத்தாண்டு வாழ்த்துக்கள். ஒவ்வொரு வருஷத்தின் ஆரம்பத்திலும் நாம் ஒரு புது தீர்மானம், அல்லது, முடிவு எடுப்போம். உதாரணமாக, பொய் சொல்லமாட்டேன்! பெற்றோருக்குக் கீழ்படிவேன் என்று முடிவு எடுத்திருக்கிறோம் நினைவிருக்கிறதா? அது போல, இந்த வருஷமும் ஒரு புது தீர்மானம், அல்லது, முடிவு எடுப்போம். அதை தேவனுக்கு பிடித்த மாதிரி எடுப்போம்.

கவனியுங்கள்! இன்றைக்கு தேவனை தொழுதுகொள்ள அல்லது, வணங்க சபையாக ஒரு இடத்தில் கூடிவருகிறோமே, அதே மாதிரி மோசேயின் காலத்தில் தேவனை ஆராதனை செய்ய, ஆசாரிப்பு கூடாரத்திற்கு கூடிவந்தார்கள். அங்கே எல்லாராலும் எல்லா வேலைகளையும் செய்ய முடியாது. தேவன் அதற்கென்று சிறப்பாக ஆரோனையும் அவன் குமாரரையும் தெரிந்துகொண்டு, ஆசரிப்பு கூடாரத்திலே விளக்கேற்றுவது, தூபம் காட்டுவது, அப்பங்களை தயார் செய்வது, பலி செலுத்துவது போன்ற வேலைகளை செய்ய கட்டளையிட்டார். ஆரோன் மற்றும் லேவியர்கள், தேவன் கட்டளையிட்டபடியே செய்தார்கள்.

குட்டீஸ்! இன்றைக்கும் சபையிலுள்ள வேலைகளை செய்யும்படிக்கு தேவன் நம்மை தெரிந்தெடுத்திருக்கிறார். நாமும்கூட சபை கூடி வருமிடத்தை சுத்தம் செய்வது, பென்ஜ் போதகரிடம் சேர் இருந்தால் துடைத்து வைப்பது, போதகரிடம் சென்று வேலைகளை கேட்டு, நம்மால் இயன்ற எல்லா வேலைகளையும் செய்து தேவ ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளலாமே!

– குமினி பிரதீப்

## தினசரி வேத வாசிப்பு

| நாள் | பகுதி | டிக் செய்யவும் |
|---|---|---|
| ஜன 1 | ஆதியாகமம் 1-3 | ☐ |
| ஜன 2 | ஆதி 4-7 | ☐ |
| ஜன 3 | ஆதி 8:1-11:9 | ☐ |
| ஜன 4 | ஆதி 11:10-14:13 | ☐ |
| ஜன 5 | ஆதி 14:14-18:8 | ☐ |
| ஜன 6 | ஆதி 18:9-21:21 | ☐ |
| ஜன 7 | ஆதி 21:22-22:47 | ☐ |
| ஜன 8 | ஆதி 24:48-26:35 | ☐ |
| ஜன 9 | ஆதி 27-29 | ☐ |
| ஜன 10 | ஆதி 30:1-31:42 | ☐ |
| ஜன 11 | ஆதி 31:43-34:31 | ☐ |
| ஜன 12 | ஆதி 35:1-37:24 | ☐ |
| ஜன 13 | ஆதி 40:9-40:8 | ☐ |
| ஜன 14 | ஆதி 40:9-42:28 | ☐ |
| ஜன 15 | ஆதி 42:29-45:15 | ☐ |
| ஜன 16 | ஆதி 45:16-48:7 | ☐ |
| ஜன 17 | ஆதி 48:8-50:26 | ☐ |
| ஜன 18 | யாத் 1:1-5:9 | ☐ |
| ஜன 19 | யாத் 5:10-8:15 | ☐ |
| ஜன 20 | யாத் 8:16-11:10 | ☐ |
| ஜன 21 | யாத் 12:1-14:20 | ☐ |
| ஜன 22 | யாத் 14:21-17:16 | ☐ |
| ஜன 23 | யாத் 18:1-21:21 | ☐ |
| ஜன 24 | யாத் 21:22-25:9 | ☐ |
| ஜன 25 | யாத் 25:10-27:21 | ☐ |
| ஜன 26 | யாத் 28-29 | ☐ |
| ஜன 27 | யாத் 30-32 | ☐ |
| ஜன 28 | யாத் 33:1-35:29 | ☐ |
| ஜன 29 | யாத் 35:30-37:2 | ☐ |
| ஜன 30 | யாத் 38:1-40:16 | ☐ |
| ஜன 31 | யாத் 40:17-38 | ☐ |
| பிப் 1 | லேவி 1-5 | ☐ |
| பிப் 2 | லேவி 6:1-11:8 | ☐ |
| பிப் 3 | லேவி 11:9-13:39 | ☐ |
| பிப் 4 | லேவி 13:40-14:57 | ☐ |
| பிப் 5 | லேவி 15:1-18:18 | ☐ |
| பிப் 6 | லேவி 18:19-21:24 | ☐ |
| பிப் 7 | லேவி 22-23 | ☐ |
| பிப் 8 | லேவி 24:1-26:13 | ☐ |
| பிப் 9 | லேவி 26:14-27:34 | ☐ |
| பிப் 10 | எண் 1:1-3:32 | ☐ |
| பிப் 11 | எண் 3:33-5:22 | ☐ |
| பிப் 12 | எண் 5:23-7:59 | ☐ |
| பிப் 13 | எண் 7:60-10:10 | ☐ |
| பிப் 14 | எண் 10:11-13:16 | ☐ |
| பிப் 15 | எண் 13:17-15:22 | ☐ |

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். சங் 1:2

# ஜனவரி மாதக் கேள்விகள்

1. நம்மை தேவனுக்கு முன்பாக ராஜாக்களும், ஆசாரியர்களுமாக ஆக்கினவர் யார்?

2. "தும்மீம் ஊரீம்" யார் வசமாய் இருக்க வேண்டும்?

3. ராஜரீக ஆசாரிய கூட்டம் என பேதுரு யாரை குறிப்பிடுகிறார்?

4. ஆசாரியர்களின் ஆத்துமாக்களை தேவன் எதினால் பூரிப்பாக்குவார்?

5. இரத்தத்தை தனக்காகவும், ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் செலுத்துபவன் யார்?

6. "உள்ளத்தில் உண்மையாயிருக்க விரும்புகிறீர்" என வாசிப்தெங்கே?

7. உண்மையுள்ள மனுஷன் எப்படிபட்ட ஆசீர்வாதங்களை பெறுவான் என்று சொல்லுகிறார்?

8. இயேசு நீதியின் மேல் பசி தாகம் உள்ளவர்களை யாரென்று சொல்லுகிறார்?

9. ஜீவனுள்ள நாளெல்லாம் எங்கே தங்கியிருக்க, தான் விரும்புதாக தாவீது கூறுகிறார்?

10. தாவீது,ஆகாமியக் கூடாரங்களில் இருப்பதை விட எதை தெரிந்துக்கொள்ளுவேன் என்கிறார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-02-2018**

**அனுப்ப வேண்டிய முவகரி : சகோதரி. பேபி ராஜா**

**45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,**
**அரசரடி, மதுரை - 625 016**
**செல்: 92 4421 4421, 92 4431 4431**

## சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. கொலே 3 : 15 | 6. சங் 34 : 1 |
| 2. 1தெச 5 : 18 | 7. மாற் 14 : 26 |
| 3. சங் 103 : 2 | 8. சங் 100 : 4 |
| 4. லூக 17 : 18 | 9. யாக 1 : 17 |
| 5. 1கொரி 10:12 | 10. அப் 17 : 25 |

## சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. கிறிஸ்டி ஜோசப் – நெல்லை
2. Mrs. சந்திரா பீட்டர் – திருச்சி
3. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
4. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் – வளர்நகர்
5. Sis. லில்லி புஸ்பம் – தூத்துக்குடி
6. Mr. ஆனந்த கதிரோன் – சென்னை
7. Mrs.பிலோமினா பிரபாகரன் – காரைக்கால்
8. Mrs. மேரி ராஜ் – மதுரை
9. Mrs. மேரி சாராள் – சமயநல்லூர்
10. D. நேசமணி – நாமக்கல்
11. M. புஷ்பராணி – நாமக்கல்
12. R. சரோஜா – தென்கலம்
13. A. இருதய மேரி – திருச்சி
14. N. லூயிஸ் ரூபி – ஆம்பூர்
15. R. ஞானசிரோன்மணி – சமயநல்லூர்
16. Mrs. ரூபி ஜெயராஜ் – மதுரை
17. Mrs. ரேச்சல் தமிழரசி – மதுரை
18. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
19. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
20. J. விஜய் – வளர்நகர்
21. G. ஏஞ்சலம்மாள் – வளர்நகர்
22. Mrs. ஞானசுந்தரி – கோவை
23. J. ஜோசப் – தூத்துக்குடி
24. Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
25. Mrs. ஷோபியா தனராஜ் – திருச்சி
26. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
27. Mrs. ஹெலன் திலக் – மதுரை
28. தெபோராள் ஸ்டீபன் – சேலம்
29. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
30. Mrs. ஹெப்ஸி தாமஸ் – பப்பை
31. Mrs. ரூபவதி நோபிள் – நெல்லை
32. Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் – கடலூர்
33. S. சூசை மரியான் – சென்னை
34. B. ஜாய்ஸ் ஜோசுவா – வெள்ளறம்
35. M. லாரன்ஸ் கோபி – வேப்பங்கனேரி
36. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
37. Mrs. சத்தியராணி – கோவில்பட்டி
38. Mrs. ஈஸ்வரி – கரூர்
39. ஜெயசுதா தேவசகாயம் – சென்னை
40. S. கேத்ரின் அருள்நேசம் – மதுரை
41. A. ரோஸ்மேரி – சென்னை
42. C. பூபதி லாரன்ஸ் – கோவை
43. Mrs. ஜெயசீலி ஜெயக்கொடி – திருச்சி
44. G. புஸ்பா ஜேம்ஸ் – விருதுநகர்
45. Mrs. ஏஞ்சலின் டேவிட் – திருப்பத்தூர்
46. Dr.D.S. ஜெபநேசன் – திருச்சி
47. S. டேவிட் சாந்தகுமார் – நெல்லை
48. Mrs. தேவி ராஜாசிங் – திருப்பூர்
49. Mrs. குளோரி திலகவதி – ஈரோடு
50. S. சந்திரமணி – திருப்பத்தூர்
51. Mrs. பியூலா ஜேசுராஜன் – புதுச்சேரி
52. Mrs. ராணி சாந்தாகுமார் – மதுரை
53. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
54. Mrs. M. திரவியம் ஆனந்தன் – ஆம்பூர்
55. Mrs. R. நிர்மலா செல்வக்குமார் – அரக்கோணம்

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

# தேவனுக்கு மகிமை!

**தேவனுடைய பெரிதான கிருபையினால், 2017 ஆண்டு இறுதியில் ஏழ்மை நிலையில் உள்ளசுமார் 100 பார்வையற்றோருக்கும், திக்கற்றவர்களுக்கும், விதவைகளுக்கும் புத்தாடைகள், 10கிலோ அரிசி, உணவு மற்றும் நினைவு பரிசுகள் புத்தாண்டு சிறப்பு பரிசாக இலவசமாக கொடுக்கப்பட்டது.**


























Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2018 - 2020
Date of Publication : 8th January 2018
Posted at Arasaradi HPO on 10th, 11th January 2018


## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்












அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்







அடிப்படை (Basic) மற்றும் முதுநிலை (Advanced)
பைபிள் பாடங்களை தபால் வழியில் படித்து,
அழகிய சான்றிதழும் (Certificate)
முழு பைபிளையும் பரிசாக பெறுங்கள்!

## கைபிரதிகள்








உங்கள் சுவிஷேச ஊழியத்திற்கு
கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில்
பாதி விலையில் கிடைக்கும்.
விபரங்களுக்கு

**92 4421 4421, 92 4431 4431**

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers